**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,திண்டுக்கல்**

**அமர்வு வழக்கு எண்.368/2018**

**அ.சா. 12 – கலா, கிராம நிர்வாக அலுவலர்**

**நாள்.22.09.2025**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**கடந்த 22.08.2018 அன்று காலை 10.00 மணிக்கு எனது அலுவலகத்திற்கு சென்றேன், பகல் 12.00 மணி வரை என்ன வேலை செய்தேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் வெளி அலுவலாக சென்றால் என்ன பணிக்கு சென்றேன் என்பதை எங்களுடைய மேல்அதிகாரியான வருவாய் ஆய்வாளரிடத்தில் தெரிவிக்க வேண்டும் என்று எங்கள் அலுவலக கையேட்டில் விதி உள்ளது என்றும் அந்த விதியை பின்பற்றி இந்த வழக்கில் வெளி அலுவலாக வந்த போது ஒரு அறிக்கை என்னுடைய வருவாய் ஆய்வாளருக்கு சமர்ப்பித்தேனா என்றார் சமர்ப்பிக்கவில்லை, நான் வாய்மொழியாக சொல்லிவிட்டு வெளி அலுவலாக போய்விட்டு மீண்டும் வாய்மொழியாக வருவாய் ஆய்வாளரிடம் தகவல் சொன்னேன். நான் வாய்மொழியாக தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் அலுவலக விதியின் படி எழுத்து மூலமாகத்தான் தெரிவிக்க வேண்டும் என்றும் அதை அவர் தலைமை வட்டாட்சியருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றால் சொன்னால் சரிதான். நான் இந்த வழக்கில் அவ்வாறு பின்பற்றவில்லை என்றால் சரிதான். அவ்வாறு விதிகளை பின்பற்றவில்லை என்றால் மேலதிகாரி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் நான் வாய்மொழியாக தகவல் தெரிவித்து விட்டேன். 22.08.2018 அன்று அம்மையநாயக்கனூர் காவல் நிலையத்திற்கு பகல் 12.00 மணிக்கு மேலாக நானும் என் உதவியாளரும் போனோம். அவ்வாறு காவல் நிலையத்திற்கு நான் போன உடன் ஆய்வாளர் எழுதி வைத்திருந்த தாளில் கையொப்பம் போட்டேன் என்றால் தவறு. என் முன்பாக ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார்கள். 2 எதிரிகளிடம் கையெழுத்து வாங்கினார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை ரைட்டர் எழுதினார். அந்தஒப்புதல் வாக்கு மூலத்தில் நானும் என் உதவியாளரும் கையெழுத்து போட்டோம். 2 எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியதாகவும் அதன் அடிப்படையில் மோட்டார் சைக்கிள் கைப்பற்றியதாகவும் நான் சொல்வது போல் போலிசார் தயார் செய்து வைத்த ஆவணங்களில் நானும் என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும்**

அதன் அடிப்படையில் சான்று பொருட்கள் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. போலிசார் வேண்டுகோளுக்கு இணங்க பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

08.09.2018 அன்று நான் என் அலுவலகத்திற்கு வேலைக்கு போனேன். அன்று 1வது எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அதன் அடிப்படையில் அவர் பயன்படுத்திய கத்தியை தன் வீட்டில் மறைத்து வைத்திருப்பதாகவும் அதை அவர் எடுத்து தங்கள் முன்பு ஆஜர் செய்ததாகவும், சொல்வது பொய் என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பள்ளபட்டிக்கும் அம்மையநாயக்கனூருக்கும் எவ்வளவு தூரம் என்றால் 2 1/2 கிமீ இருக்கும். அம்மையநாயக்கனூருக்கும் கொடைரோட்டுக்கும் இடையே 1/2 கிமீ தூரம் இருக்கும், சிலுக்குவார்பட்டிக்கு 2 கிமீ தூரம் இருக்கும், மேற்படி ஊர்களுக்கு தனிதனியாக கிராம நிர்வாக அதிகாரிகள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். அவர்களை அழைக்காமல் என்னை போலிசாருக்கு வேண்டியவர் என்பதாலும், போலிசாரின் பணிந்த கையிருப்பு சாட்சி என்பதாலும் என்னை அழைத்தார்கள் என்றால் சரியல்ல. என்னை அழைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.22 19:40:29 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.